# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 76 — 1973 සැප්තැම්බර් 07 වැනි සිකුරාදා — 1973.09.07

76 ம் இலக்கம் — 1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (III) — வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் .. | 181 | அலங்காரச் சித்திரச்சட்ட விளம்பரங்கள் .. .. | — |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு .. .. | 183 | வடிவ அமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | — |
| ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | — | பலவிதமானவை .. .. .. | — |


கவனிக்க.—அரச காணிகள் விற்பனை (சிறப்பேற்பாடுகள்) சட்ட மூலமும் கமத்தொழிற் காணிகள் சட்டமூலமும் 1973 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பிகயாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம், கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### பரிசோதனைக்குரிய நேரம்

அலுவலகத்திற்குச் சொந்தமான பதிவேடுகளைப் பொது மக்கள் பார்வையிடுவதற்காக, அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் 9 மணி தொடக்கம் 3 மணி வரையிலும், சனிக்கிழமைகளில் 9 மணி தொடக்கம் 11 மணி வரையிலும் திறந்திருக்கும்.

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 3 மணிவரையிலும், சனிக்கிழமைகளில் மத்தியானம் 12 மணி வரையிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது, அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

### கூட்டுச் சேர்க்கை

150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப் படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.

### " அ " அல்லது " ஆ " பகுதியின் கீழ் விண்ணப்பம்

பதிவேட்டின் " அ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் " ஆ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் உத்தியோக எண்ணுக்கு முன் " ஆ " என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

---

வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.*

*எல். டபிள்யூ. பீ பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்,*


---

## எதிர்ப்பு

**பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தகப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது படிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன் ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினால், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசீலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.**

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,579. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் மே மாதம் 30 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : பெரிங்வர்க் ஐக்டியென் கெசல்ஷாப்ற், ஜெர்மனிய நாட்டுச் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டதோர் கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பெனி, மாபர்க் (லான்) ஜெர்மனி; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் எவ். ஜே. அன்டு ஜி. த சேரம், த. பெ. இல. 212, கொழும்பு. (5) வகுப்பு : 1. (6) வியாபாரச் சரக்கு : விஞ்ஞான ஆய்வு கட்குரிய இரசாயன விளைவுப் பொருட்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :




ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 20 ம் உ.

9–121/1—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 31,696. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் ஜூலை மாதம் 15 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : பெணரல்பென் மில்ச் கெசல்ஷாப்ற் சொசயிற்றி லெயிற்றியர் டெஸ் அல்பெஸ் பேர்ணெய்சஸ் என்பதாகவும் பேர்னீஸ் அல்ப்ஸ் மில்க் கோ. என்பதாகவும் வியாபாரஞ் செய்பவர், (சுவிற்சலந்து, சட்டங்களுக்கேற்ப நிறுவப்பட்டதோர் கூட்டுப்பங்குத் தொகுத்த கம்பனி) ஸ்ரோல்டன், எமென்தோல், சுவிற்சலந்து, உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் எவ். ஜே. அன்டு ஜி. த சேரம், த. பெ. இல. 212, கொழும்பு. (5) வகுப்பு : 42. (6) வியாபாரச்சரக்கு : ஒடுக்கியபால்.

(7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :




இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 2044 உடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஆர். எல். த. சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1972 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 2 ம் உ.

9–121/2—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 34,109. (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் ஜனவரி மாதம் 6 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : ஃபார்ப்வெர்க்கே ஹோயிஸ்ட் ஐக்டியன் கெசல்ஷாப்ற் வோர்மல்ஸ் மெயிஸ்ரர் லூசியஸ் அன்டு புறுனிங் (மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுவினது சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டதோர் கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பெனி) ஃபிராங்ஃபார்ட்/எம்–ஹோயிஸ்ட், புறுனிங்ஸ்ரஸ்ஸி 45, மேற்கு ஜெர்மனி ; உற்பத்தியாளர்களும், வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் எவ். ஜே. அன்டு ஜி. த சேரம், த பெ. இல. 212, கொழும்பு. (5) வகுப்பு : 17. (6) வியாபாரச்சரக்கு : கட்டடப் பொருட்கள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**HOSTASET**

இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இலக்கங்கள் 33,268, 33,277, 33,416, 33,439, 33,270 என்பன பதிவு செய்யப்படுமிடத்து அத்தருணம் அவற்றுடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 10 ம் உ.

9–121/3—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 32,778. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் ஜூன் மாதம் 28 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : கற்ரா அன்டு கோ., ஜி எம் பி எச் டால் ஜேட்–ஹோஸ், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுவினது சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டதோர் வரையறுத்த பொறுப்புக் கம்பனி : இல. 6, ஃபிராங்ஃபார்ட் (மெயின்) ஃபெச்சன்ஹீம், ஹனோவர் லான்ட் ஸ்றஸ்ஸி 523, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு ; வண்ணப்பொருட்கள், மருந்துப்பாகசாலை ஆக்கப்பொருட்களின் உற்பத்தியாளர்களும், வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் எவ். ஜே. அன்டு ஜி. த சேரம், த. பெ. இல. 212, கொழும்பு. (5) வகுப்பு : 48. (6) வியாபாரச் சரக்கு : நறுமணப் பொருள்வகை, வண்ணப்பொருள் தயாரிப்புக்கள், வாசனைச் சவர்க்காரம், பற்சுத்திகரிப்புச் சாதனங்கள், கூந்தல் திரவங்கள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**JADE**

ஆர். எஸ். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 26 ம் உ.

9–121/4—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

(1) வியாபாரச்சின்னம் இல. 34,572. (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் ஜூன் மாதம் 27 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : படிஸ்சே அனிலின் அன்டு சோடா ஃபப்றிக் ஐக்டியென் கெசல்ஷாப்ற் (ஜெர்மன் சமஸ்டிக் குடியரசுவினது சட்டங்களுக்கேற்ப நிறுவப்பட்டதோர் கூட்டுப் பங்குத் தொகுதிக் கம்பெனி) இல. 38, கால்–பொஸ்ச்–ஸ்றஸ்ஸி, லுட்விக்ஷாஃபென்–ஒன்–றைன், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு ; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் எவ். ஜே. அன்டு ஜி. த சேரம், த. பெ. 212, கொழும்பு. (5) வகுப்பு : 1. (6) கெட்டியாக்குதற்கும் கலேத்தற்கும் எதுவான வண்ணப் பொருட் கைத்தொழிலில் உபயோகிக்கும் இரசாயன ஆக்கங்களாகிய கைத்தொழில் நோக்கங்கட்கான இரசாயன விளைவுகளும் உபபொருட்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**LUVISKOL**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜன்வரி மீ 20 ந் உ.

9-121/5—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

(1) வியாபாரச் சின்னம் இல. 30,474. (2) பெற்ற திகதி : 1968 ம் வருடம் ஜூலை மாதம் 20 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர் : யுனிலிவர் லிமிட்டெட் (ஓர் பிரித்தானியக் கம்பெனி) போட் சன்லேற், ப்பேக்கன்ஹெட், செஷயர்,, இங்கிலாந்து, உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : லீவர் பிறதர்ஸ் (சிலோன்) லிமிட்டட், இல. 258, கிருறண்ட்பாஸ் தெரு, கொழும்பு 14. (5) வகுப்பு : 47. (6) வியாபாரச் சரக்கு : துணிகள் சலவை செய்வதற்குப் பாவிக்கப்படும் பொதுவான சவர்க்காரமும், சுத்தப்படுத்துவதற்கான சாதனங்களும் தயாரிப்புக்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :




இவ்வியாபா உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 24,476 உடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஜூன் மீ 30 ந் உ.

9-156/1—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

(1) வியாபாரச்சின்னம் இல. 32,948. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் ஒகஸ்டு மாதம் 25 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : வினில் பிறடக்ஸ் லிமிட்டட், ஓர் பிரித்தானியக் கம்பெனி, மில் லேன், கார்ஷல்ரன், சரே, இங்கிலாந்து ; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : லீவர் பிறதர்ஸ் (சிலோன்) லிமிட்டட், த. பெ. இல. 283, கொழும்பு. (5) வகுப்பு : 1. (6) வியாபாரச்சரக்கு : கைத்தொழிற் தேவைகட்குரிய தொகுத்த குங்கிலியத்திலுற் தயாரிக்கப்பட்ட பிளாஸ்டிக் வகைகள் (சாயங்கள், எண்ணெய் கலந்த வர்ணம், மினுக்கிகளோ அல்லது ரப்பருக்குப் பதிலான பொருட்களோ அல்ல) தொகுத்த குங்கிலிய வண்ணக் குழம்பு சேர்ந்த ஒட்டும் பொருட்கள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**VINAMUL**

இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 32,912 பதிவு செய்யப்படுமிடத்து அத்தருணம் அதனுடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1971 ம் ஆண்டு ஜூலை மீ 9 ந் உ.

9–156/2—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

(1) வியாபாரச் சின்னம் இல. 30,754. (2) பெற்ற திகதி : 1968 ம் வருடம் ஒக்டோபர் மாதம் 14 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : யுனிலிவர் லிமிட்டட், ஓர் பிரித்தானியக் கம்பெனி, போட் சன்லேற், செஷயர், இங்கிலாந்து; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : லீவர் பிறதர்ஸ் (சிலோன்) லிமிட்டட், த. பெ. இல. 283, கொழும்பு. (5) வகுப்பு : 42. (6) வியாபாரச்சரக்கு : ஆகாரத்துக்கேற்ற தைலங்கள், ஆகாரத்துக்கேற்ற கொழுப்புகள், தாவரக் கொழுப்பு, உணவுத் தயாரிப்பில் உபயோகிக்கப்படும் சத்துக்கள் அல்லது உணவுச் சேர்க்கைகள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**PROFILE**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 30 ந் உ.

9–155—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

## வியாபார உரிமை அடையாள அறிவிப்பு

### பிழை திருத்தம்

1972 ம் வருடம் சனவரி மாதம் 14 ம் திகதியைச் சேர்ந்த 14,493 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில 1968 ம் வருடம் ஒக்டோபர் மாதம் 2 ம் திகதியிடப்பட்ட 2 ம் வருப்பைச் சார்ந்த வியாபார உரிமை அடையாள இல. 30,714 சம்பந்தமாகத் தமிழில் பிரசுரிக்கப்பட்ட புள்ளிவிபரம் (7) பின்வருமாறு பிழை திருத்தம் செய்து வாசிக்கப்படல் வேண்டும்:

புள்ளி விபரம் (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் : —

**PRO-GEN**

ஆர். எல். த. சில்வா,
வியாபாரச் சின்னப் பதிவாளர்.

கம்பெனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஜூலை மீ 21 ந் உ.

9–4—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

**01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

# இலங்கைக் குடியரசு வர்த்தமானி

வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. *பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும்* **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. **தனிப்பட்ட** *விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

3. **சனிக்கிழமைகளில்** *மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.*

4. **சனிக்கிழமைகளில்** *மு. ப. 11.00 மணிக்கும், மற்றும்நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாரங்கல் முடிவுறும்.*

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.*

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** *பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.*

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. *வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா*

9. *நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறோக்கரால் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.*

10. *அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள்* **1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து** *பின்வருமாறு :—*

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.*

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும்.** *அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு,** *அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.*

13. **சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.**

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கு சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 0 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | 0 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 0 | 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும் வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 31.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 7.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 14.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 21.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |

எல். டபிள்யு. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆல் ஓகத்து மீ 18 ந் வ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.